**தலைவர், பள்ளிபாளையம் அக்ரஹாரம் ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திருமதி வசந்தி வெங்கடாசலம்**

ந.க.எண்.1/2024 நாள் : 15.04.2024

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் நாமக்கல் ந.க.எண்.NKL/DMVAPB6G/21411/2024/TCP - நாமக்கல் மாவட்டம் - குமாரபாளையம் வட்டம் - பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் -பள்ளிபாளையம் அக்ரஹாரம் ஊராட்சி/கிராமம் ச.எண்.358/1A2-ல் 2.45 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடுதல் தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் திரு.S.நடேசன் மற்றும் P.ஜீவ நந்தகுமார் அவர்களின் கடிதம் நாள் : 11.01.2024
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் மாவட்டம் அவர்களின் ந.க.எண். NKL/DMVAPB6G/2024/TCP ,நாள் : 24.01.2024.
3. வேளாண்மை இணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதம் எண். E4/17447/2023, நாள் : 08.01.2024.
4. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3)த் துறை, நாள் : 04.05.2017.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள் : 19.04.2012.
6. மனுதாரர் திரு.S.நடேசன் மற்றும் P.ஜீவாநந்தகுமார் அவர்களின் மனைப்பிரிவு முன்மொழிவு கடிதம் DMVAPB6G/2024, தான பத்திர எண் :1/721/2024 1/722/2024 தேதி 01.03.2024
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020, நாள் : 24.12.2020.
8. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள் : 04.06.2004.
9. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள் : 04.02.2019.
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/SPI-Cell, நாள் : 28.09.2017
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/90/எல்ஏ1, நாள் : 07.11.1992.
12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந..க.எண்.13686/2017/எல்ஏ1, நாள் : 08.09.2017.

<u>ஆணை</u> :

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், பள்ளிபாளையம் அக்ரஹாரம் ஊராட்சி/கிராமம், சர்வே எண். 358/1A2-ல் 2.45 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான உத்தேசங்கள் பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய 24.01.2024 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு, மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ம(நா) எண். NKL/DMVAPB6G/2024/TCP என எண்ணிடப்பட்டு உத்தேசமனை பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் ஒன்றியம், பள்ளிபாளையம் அக்ரஹாரம் கிராமம், சர்வே எண். 358/1A2-ல் 2.45 ஏக்கர் பரப்பில் உள்ள நிலமானது சேலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தால் கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

<u>உத்தேச மனைப்பிரிவிற்கான பரப்பளவு</u> :

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு : 2.45 ஏக்கர் அல்லது 9915 ச.மீ.

மேற்காணும் உத்தேச மனைப்பிரிவிற்கான அமையும் இடத்திற்கு மனையிட ஒப்புதல்

கட்டணம் : 2.45 ஏக்கர் x ரூ.6,00,000.00 = ரூ.$\frac{14,70,000.00}{3/100}$ = 44,100.00

= ரூ. 44,100/-

| | |
|---|---|
| 0217 - Urban Development<br>60 – Other Urban development schemes<br>800 – Other Receipts<br>AS – Receipts under Lands use conversion charges<br>27 Non-Taxation fees – 09 collections.<br>(DPC : 0217-60-800-AS-22790) | சலான் மூலம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.<br>சலான் எண்.20240316001946<br>SBI, பள்ளிபாளையம்.<br>நாள் : 16/03/2024. |

தற்சமயம் மேற்படி வட்டாரம், பள்ளிபாளையம் அக்ரஹாரம் ஊராட்சி/கிராமம் சர்வே எண். 358/1A2-ல் 2.45 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள இடத்திற்கு பள்ளிபாளையம் அக்ரஹாரம் ஊராட்சி மன்ற தீர்மான எண்947/16.03.2024-ன்படி கீழ்கண்டவாறு நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் :**

1. நாமக்கல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண். NKL/DMVAPB6G/21411/2024/TCP , நாள் : 24.01.2024 ன் படி உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றபட வேண்டும்.

2. உத்தேச மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விவரங்களை இவ்வலுவக அனுமதியின்றி மாற்றியமைத்தல் கூடாது.

3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கத் தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்திட அனுமதியில்லை.

4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.

5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்திரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவர்.

6. பத்திர பதிவுகள் மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழுப் பொறுப்பாவார்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறனால் இம்மனை ஒப்புதல் உத்தரவு முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

தலைவர்
ஊராட்சி மன்றம்
பள்ளிபாளையம் அக்ரஹாரம்

தலைவர்,
பள்ளிபாளையம் அக்ரஹாரம் ஊராட்சி,
பள்ளிபாளையம் ஒன்றியம்.

பெறுநர்

திரு/திருமதி . S.நடேசன் மற்றும் P.ஜீவா நந்தகுமார்,
4/7, தெற்க்குப்பாளையம்,
பள்ளிபாளையம் அக்ரஹாரம்,
குமாரபாளையம்,
நாமக்கல் மாவட்டம்.